# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 13-08-2019 செவ்வாய் கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண் .1

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 08-08-2019-ம் நாளைய தொலைபேசி செய்தியில் குழித்துறை நகராட்சி பகுதியில் சேதமடைந்துள்ள சாலைகளை தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2019-2020-ன் கீழ் ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில், சீரமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சி பகுதியில் சேதமடைந்துள்ள கீழ்காணும் சாலைகளை சீரமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி- வார்டு எண்.1-ல் படப்பறை முதல் வள்ளிக்கோட்டு குளம் வரை சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 29.00 |
| 2 | குழித்துறை நகராட்சி- வார்டு எண்.4-ல் PWD அலுவலகம் முதல் பெருந்தெரு மீன்சந்தை வரை மற்றும் பெண்டுகடவு தெரு சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல் | 27.50 |
| 3 | குழித்துறை நகராட்சி- வார்டு எண்.5-ல் தபால் நிலைய சந்திப்பு முதல் கால்நடை மருத்துவமனை வரை (VLC மைதானம் அருகில்) பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 13.50 |
| 4 | குழித்துறை நகராட்சி – வார்டு எண்.7-ல் உண்டனாகுழி பகுதியில் சாலையில் தார் சாலை அமைத்தல் | 30.00 |

| | | |
|---|---|---|
| 5 | குழித்துறை நகராட்சி – வார்டு எண்.10-ல் கொல்லக்குடி விளை சாலையில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 10.00 |
| | மொத்தம் | 110.00 |

மேற்காணும் சாலைகளை சீரமைக்க தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2019-2020-ன் கீழ், முழு மானியமாக நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3319**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண் .2</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 94-வது வாவுபலி பொருட்காட்சியில் விவசாய கண்காட்சி, கைவினை கண்காட்சி மற்றும் கபடி போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கிட 30-07-2019 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை | பௌர்ணமி மெட்டல்ஸ் | நியூ பவுர்ணமி மெட்டல்ஸ் | ஸ்ரீமணி கண்டன் மெட்டல்ஸ் |
|---|---|---|---|---|---|
| 1 | அண்டா | 2 | 1075 | 1000 | 1150 |
| 2 | குக்கர் | 175 | 825 | 785 | 875 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | சம்படம் | 90 | 495 | 475 | 505 |
| 4 | டிஷ் பெரியது | 30 | 275 | 265 | 290 |
| 5 | டிஷ் சிறியது | 75 | 165 | 150 | 180 |
| 6 | காப்பர் உருளி | 24 | 390 | 370 | 400 |
| 7 | காப்பர் உருளி | 24 | 360 | 340 | 370 |
| 8 | Special டிஷ் | 12 | 375 | 360 | 390 |
| 9 | Special டிஷ் | 12 | 275 | 265 | 290 |
| 10 | பான்பானிபுஷ் | 12 | 325 | 310 | 340 |
| 11 | Special டிஷ் | 12 | 280 | 265 | 290 |
| 12 | Brass கப் | 4 | 930 | 900 | 975 |
| 13 | Trophy | 1 | 1850 | 1800 | 1900 |

அவசர அவசியம் கருதி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நியூ பவுர்ணமி மெட்டல்ஸ் என்ற நிறுவனம் மூலம் பரிசு பொருட்கள் வாங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3320**

**அனுமதிக்கப்படுகிறது.**

# குழித்துறை நகர்மன்றத்தின் 30-08-2019 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சி குடிநீர் உபவிதியின் அடிப்படையில் தற்போதுள்ள குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை கீழ்கண்டவாறு உயர்வு செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண் | தற்போதுள்ள குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை | திருத்தியமைக்கப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் ரூபாய் | திருத்தியமைக்கப்பட வேண்டிய வைப்புத் தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை ரூ.3000/-<br>குடிநீர் கட்டணம் 1000 லிட்டருக்கு ரூ.5.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.50/- | வீட்டு உபயோகத்திற்கான குடிநீர் கட்டணம் 1000 லிட்டருக்கு ரூ.15.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.150/- | வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை ரூ.10000/- |
| 2 | வீட்டு உபயோகம் அல்லாத குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை ரூ.6000/-<br>குடிநீர் கட்டணம் 1000 லிட்டருக்கு ரூ.15.00 வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.150/- | வீட்டு உபயோகமல்லாத இதர உபயோகத்திற்கு 1000 லிட்டருக்கு கட்டணம் ரூ.36.00 வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.360/- | வீட்டு உபயோகமல்லாத இதர உபயோக குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை ரூ.15000/- |
| 3 | தொழிற்சாலைகளுக்கு குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை ரூ.6000/-<br>குடிநீர் கட்டணம் 1000 லிட்டருக்கு ரூ.20.00 வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.200/- | தொழிற்சாலைகளுக்கு 1000 லிட்டருக்கு கட்டணம் ரூ.54.00 வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.540/- | தொழிற்சாலைகளுக்கு குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை ரூ.20000/- |

மேற்கண்டவாறு குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் திருத்தியமைக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3321**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி. ராஜம்மாள் என்பவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட காலங்கடந்த தொழில்வரி ரூ36,960/- நாளது வரையில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.34,720/-ஐ ஓய்வு பெற்ற பணியாளருக்கு வழங்கிட மன்ற அனுமதிக்கு.
அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3322**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.3

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன இயக்குநர், கோயமுத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.648/2019/ 2, நாள் 30-07-2018-ல் 2019-2020-ம் ஆண்டிற்கான நகராட்சி பங்குத் தொகை ரூ.20,000/- (இருபதாயிரம்) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.20,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றம் அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3323**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.4

இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருள்கள் தக்கலை கூட்டுறவு அச்சகத்திலிருந்து வாங்கிய வகையில் செலவுத் தொகை ரூ.129264/- பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3324**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.5</u>

தமிழ்நாடு மாநகராட்சிகள் (Municipal Corporations) மற்றும் நகராட்சி பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ உரிமம் வழங்குதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2018-ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்களுக்கான திருத்தச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/2018) தொடர்பான அரசாணை (நிலை) எண்.15 ந.நி.(ம) கு.வ.(MC-1) துறை நாள் 31-01-2019 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விளம்பர பலகை நிறுவ உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003-ல் திருத்தங்கள் மேற்கொண்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.16 மற்றும் 17 ந.நி.(ம)கு.வ.(MC-1)துறை நாள் 31-01-2019 ஆகிய இரு அரசாணைகளும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 3325**
**அனுமதிக்கலாம்.**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண்.G3 9 வருடம் முடிந்த கடையை பொது ஏலம் விடப்பட்டது. இதில் கடை உரிமம் கிடைக்காத உரிமதாரர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்கி கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | T.உதயசிங் | 2008-2009 | PPM-G3 | 108732 | 40 |

**நகர்மன்றத் தீர்மான எண். 3326**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்கு எரியாமல் உள்ளது. மேற்படி மின்கம்பத்தில் குருவி கூடு கட்டியுள்ளதால் மின் விளக்குகளை Rope மூலம் கீழே இறக்க இயலாமலுள்ளது. மேலும் எலி புகுந்து கேபிள்கள் அறுக்கப்பட்டுள்ளது. எனவே குருவி மற்றும் எலிகள் புகாதவாறு வலை அமைக்கப்பட வேண்டும். தற்போது நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள ரூ.60,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3327**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தமிழ் முரசு சுதந்திரதின தொழில்மலர் 2019-ல் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.,9975/- KAL Publication Pvt Ltd-க்கு வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. (பட்டியல் எண்.3300176470, நாள் 14-08-2019) மேற்படி பட்டியல் தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3328**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களான கடைகள் பேருந்து நிலைய நுழைவு கட்டணம் மற்றும் இதர இனங்களுக்கு 26-06-2019-ல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் தமிழ்சுடர் பத்திரிகையில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.18900/-ம் தமிழ்சுடர் பத்திரிகைக்கு வழங்க மன்றம் அனுமதிக்கு.
ந.க.எண்.2036/2018/அ2

**நகர்மன்றத் தீர்மான எண். 3329**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75M-8752-ற்கு 2019-2020-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு வாகனம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.40,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3330**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75L-5874-ற்கு 2019-2020-ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட Hari Bala krishna Auto mobiles நிறுவனம் மூலம் வாகனம் ஆய்வு செய்யப்பட்டு ரூ.48,000/.-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகளை Hari Balakrishna Auto mobiles நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3331**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 12</u>

2018-2019-ம் ஆண்டிற்கான குழித்துறை நகராட்சி நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கம்.

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3332**

**அனுமதிக்கலாம்**

ஒப்பம்/- திரு.எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.